# திருவருட்பிரகாச

# வள்ளலார்

பிப்ரவரி விலை ரூ.10/- **THIRUVARUTPRAKASA VALLALAR** ஆன்மிக மாத இதழ்



வள்ளல் பெருமானார்
சித்தி வளாகத்தில்
சித்தியடைந்த திருமாளிகை

# திருஅருட்பிரகாச வள்ளலார்


சன்மார்க்கத் தமிழ் திங்கள்இதழ்

தனிஇதழ் ரூ.10/- ஆண்டு சந்தா ரூ.110/-

Volume: 07 | விகாரி ஆண்டு / மார்கழி - தை / ஜனவரி- 2020 | Issue: 02

மாத பூசத் திருநாள்: 08.02.2020, அடுத்த மாதம் பூசம்: 06.03.2020



தவத்திரு.
**சதீஷ்ராஜ் அடிகளார்,**
நிறுவனர்

தவத்திருமதி.
**தனலட்சுமி அம்மையார்,**
ஆசிரியர், வெளியிடுபவர்
மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:
**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**
17, கென்னடி சதுக்கம்,
முதன்மைச்சாலை, சென்னை- 600011.
தொடர்புக்கு:044-25589575, 9003034056



திருக்குறள் சன்மார்க்க உரை 04

மகாத்மா காந்தியின் சுயசரிதை 06

வாழ்க்கையும், வள்ளலாரும் 10

அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம் 14

சகோதர - சகோதரிகளே 16

படங்கள் 18

தைபூசத்தின் சிறப்பு யாது? 20

23 வடலூர் அருட்பயணம்

24 வள்ளலார் உடம்போடு மறைந்தார் என்பதை உறுதி செய்த தகவல்

26 சித்தி வளாகத்தில் அன்னைக்கு கிடைத்த அனுபவம்

31 உங்கள் கவனத்திற்கு...

32 புன்னியத்தை தேடி...

34 நீங்களும் அன்னதர்மம் செய்யலாம்

# திருக்குறள் - சன்மார்க்க உரை

-திரு.சீனிசட்டையப்பனார்

## தெரிந்து வினையிடல்

(ஆன்ம ஞானத்தால் அறிய வந்ததாகிய ஆன்மநேய வினையை மேற்கொள்ளுதல்)



**நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும். 511**

அகிம்சை அறம், இம்சை மறம் ஆகியவற்றை ஆன் ஞானத்தால் அளவிட்டறிந்து அகிம்சை அறம் தழைய அருள்வினையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை**
**ஆராய்வான் செய்க வினை. 512**

அருள் செல்வத்தைப் பெருகச் செய்தும் அதற்கான ஆன்மநேய ஒருமைப்பாட்டு வழிமுறைகளை ஒருங்கமையச் செய்தும் ஆள்வினையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்**
**தன்குடையான் கட்டே தெளிவு. 513**

ஆன்ம நெகிழ்ச்சி, ஆன்ம ஞானம், ஒருமைப் பக்குவம் தீமையை விட்டு விடுகின்ற விருப்ப முயற்சி இவை உடையவனிடமே செயல் முறையை நம்பி ஒப்படைத்தல் வேண்டும்.

**எனைவகையான் தேறியக் கண்ணும்**
**வினைவகையான் வேறாகும் மாந்தர் பலர். 514**

எப்படிப்பட்ட கலைஞானம், தொழில் நேர்த்தி வளச்சேர்க்கை இருக்குமாயினும் உயிரிரக்கச் செய்திறன் உடையவனையே செயற்பாட்டிற்குத் தேர்தல் வேண்டும்.

**அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்**
**சிறந்தானென்று ஏவற்பாற் றன்று. 515**

மனித நேய உயிர்நேய செய்நேர்த்திகளைத் தெரிய வந்து அதற்கான ஆள்வினையைத் தேர்ந்து பின் செயலில் திறமுடையான் என்பது தெளிய வருதலே தகுதியானது.

**செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு**
**எய்த உணர்ந்து செயல். 516**

ஆன்ம ஒருமைக்கான செயல்களைத் தேர்வு செய்து அதனை அலந்தார் கண் அற்றார் கண் அருள்பற்றிச் செயல் செய்யும் தன்மைகளையும் தேர்ந்து ஒருவகைத் தெரிவு செய்தல் நன்று.

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல். 517**

இரக்கத் திருநெறியை இரக்கச் செயல்பாட்டினை இரங்கும் உணர்வாளர்களிடமே ஒப்படைத்தல் வேண்டும்.

**வினைக்குரிமை நாடிய பின்றை அவனை**
**அதற்குரிய னாகச் செயல். 518**

சீவகாருணிய செய்வினைக்குத் தேர்ந்து கொள்ளப்பட்ட அறவாணனை உரிமை யுடன் இயங்க உதவிடல் வேண்டும்.

**வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக**
**நினைப்பானை நீங்கும் திரு. 519**

அகிம்சை அறம் தழைக்க முயலாமல் இம்சை அற தழைக்கும் செயல்முறைகளில் ஈடுபடின் வரவேண்டிய அருள்வளம் அகலும்.

**நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்**
**கோடாமை கோடா துலகு. 520**

நல்லறச் செயல்களை நாள்தோறும் பின்பற்று கின்றவனிடம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டாளர்கள் ஆள்வினையைச் செய்ய முழு உரிமையையும் தந்திடலாம்.

மாதம் ஒரு மகான்

# புலத்தியர்

"உருவான புலஸ்தியரின் மார்க்கம் கேளு
ஓகோகோ நாதாக்கள் அறிந்ததில்லை
கருவான தேவரிஷி தன் வரத்தால்
கமலமுனி தன் வயிற்றில் பிறந்த பேரன்
திருவான அகஸ்தியருக்கு உகந்த சீடன்
தீர்க்க முள்ள சிவராஜ புனித யோகன்
பருவான திருமந்திர உபதேசந்தான்
பாருலகில் புலஸ்தியர் என்றறைய லாமே''

–போகர் ஏழாயிரம்

போகர் ஏழாயிரத்தில் புலஸ்தியர் கமல முனியின் பேரன் என்றும், ஆவணி மாதம் அனுஷ நட்சத்திரம் நாலாம் பாதத்தில் பிறந்தவர் என்றும், அகத்தியருக்கு உகந்த சீடர் என்றும், சிவராஜ யோகி என்றும், திருமந்திர உபதேசம் பெற்றவர் என்றெல்லாம் விளக்கமாகக் கூறுகின்றார்.

இவர் திரணபிந்துவின் தவச் சாலையில் தவம் செய்து கொண்டிருக்கும் போது அரம்பையர் பலர் நீர் விளையாட்டிற்கு அங்கு வந்தனர். அவர்களின் கேலிப் பேச்சும் ஆரவாரமும் புலத்தியரின் தவத்திற்கு இடைஞ்சல் செய்தன.

இதனால் கோபமுற்ற புலத்தியர் அந்த அரம்பையர்களிடம் இனி என்னுடைய எதிரில் யாராவது பெண்கள் வந்தீர்களானால் கருப்பமடைவார்கள் என்று சாபமிட்டார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் புலத்தியரின் சாபத்திற்கு அஞ்சி எந்தப் பெண்களும் வராமலிருந்தனர்.

புலத்தியரின் சாபத்தினை அறியாத திரணபிந்துவின் மகள் ஆவிர்ப்பு இவருடைய ஆசிரமத்திற்குப் பக்கத்தில் சென்றாள். அவரின் சாபத்தால் உடனே அவள் கர்ப்பமுற்றாள். திடுக்கிட்ட அவள் தன்னுடைய தந்தையிடம் போய் செய்தியைக் கூறினாள்.

அவள் கர்ப்பமடைந்துள்ளதால் அவளை மணந்து கொள்ளும் படி திரணபிந்து கூற குரு கட்டளைப்படியே அவளை மணந்து இல்லறத்திலீடுபட்டார்.

கார்த்த வீரியனாற் சிறையிடப்பட்ட இராவணனை இவர் சிறை மீட்டார்.

தமது தாயான கலைமகளிடம் இவர் செல்லுங்கால் தனது . மைந்தன் என்ற பற்றுதலில்லாமல் வரவேற்றார். இதனால் கோபமுற்ற புலத்தியர் அவளை நதியாகி ஓடும்படி சாபமிட்டார். சரஸ்வதியும் பதிலுக்கு அரக்கரில் விபீடணனாகப் பிறப்பெடுக்கும் படி பதில் சாபமிட்டார்.

புலத்தியருக்கு விசித்திர வசு, அகத்தியர் என்னும் இரண்டு மகன்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

சிங்கள நாட்டில் பிறந்த புலத்தியர் தம் இறுதிக் காலத்தில் சீனதேச கடலோரத்தில் சிலநாள் தங்கியிருந்து பிறகு தேரைய ரோடு பொதிகை மலைச் சாரலில் வந்து சமாதி புகுந்தார்.

பிறகு சிலகாலம் சென்று வெளியே வந்து தேரையருக்கு வைத்திய இரகசியங்களைப் போதித்துவிட்டு மறுபடியும் சமாதி புகுந்தார்.

புலத்தியர் வைத்திய வாதம், புலத்தியர் வாத சூஸ்திரம், புலத்தியர் ஞான சூஸ்திரம், புலஸ்தியர் வைத்தியம், புலத்தியர் வழலைச் சுருக்கம், புலத்தியர் கற்ப சூஸ்திரம் ஆகிய நூல்களை புலத்தியர் எழுதியதாகத் தெரிகிறது.

புலத்தியரின் சமாதி பொதிகை மலைச்சாரலில் பாபநாசத்தில் இருப்பதாகக் கூறுவர். இரண்டாவது முறையாக ஆவுடையார் கோயிலிலும் சமாதியடைந்ததாகக் கூறப்படுகிறது.

சென்ற மாதத் தொடர்ச்சி...



# மகாத்மா காந்தியின் சுயசரிதை...

-மூன்றாம் பாகம்

## 4. புயலுக்குப்பின் அமைதி

இன்னும் போலீஸ் ஸ்டேஷனை விட்டு, நான் வீட்டுக்குப் போகவில்லை. இரண்டுநாள் கழித்துப் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தபடியே என்னை ஸ்ரீ எஸ்கோம்பிடம் அழைத்துச் சென்றனர். எனக்குப் பாதுகாப்பு, முன் எச்சரிக்கை எதுவுமே தேவை இல்லாதிருந்தும் என் பாதுகாப்புக்காக இரு போலீஸாரை என்னுடன் அனுப்பினர்.

கப்பலிலிருந்து இறங்கிய அன்று, மஞ்சள் கொடி இறக்கப்பட்டதும்,'நேட்டால் அட்வர்டைஸர்' பத்திரிகையின் பிரதிநிதி, என்னைப் பேட்டி காண்பதற்குக் கப்பலுக்கு வந்தார். அவர் என்னைப் பல கேள்விகள் கேட்டார். அவற்றிற்குப் பதில் அளிக்கையில், என்மீது கூறப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டையும் நான் மறுக்க முடிந்தது.

இந்தியாவில் நான் செய்த பிரசங்கங்கள் யாவும் எழுதிப் படித்தவை. இதற்காக ஸர் பிரோஸ்ஷோ மேத்தாவுக்கு நான் நன்றி செலுத்த வேண்டும். அந்தப் பிரசங்கங்களின் பிரதிகளும் என்னிடம் இருந்தன.

நான் மற்றபடி பத்திரிகைகளுக்கு எழுதிய வைகளுக்கும் நகல் வைத்திருந்தேன். என்னைப் பேட்டிகாண வந்த நிருபரிடம் அவைகளை யெல்லாம் கொடுத்தேன். தென்னாப்பிரிக்காவில், அதிகக் கடுமையான பாஷையில் சொல்லாதது எதையும் நான் இந்தியாவில் சொல்லி விடவே இல்லை என்பதையும் அவருக்குக் காட்டினேன்.

'கோர்லாண்டு', 'நாதேரி' கப்பல்களில் பிரயாணிகள் தென்னாப்பிரிக்காவுக்கு வந்ததில், என் சம்பந்தம் எதுவுமே இல்லை என்பதையும் அவருக்குக் காட்டினேன். அப் பிரயாணிகளில் அநேகர், முன்பே அங்கே வசிப்பவர்கள். மற்றும் பலர் டிரான்ஸ்வாலுக்குப் போகிறவர்களேயன்றி நேட்டாலில் தங்க விரும்புகிறவர்கள் அல்ல.



அந்தக் காலத்தில் செல்வம் தேட வருகிறவர்களுக்கு, நேட்டாலைவிட டிரான்ஸ்வால்தான் அதிகச் சௌகரியமானதாக இருந்தது. ஆகையால், இந்தியரில் அநேகர் அங்கே போகவே விரும்பினார்கள்.

பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியும், என்னைத் தாக்கியவர்கள் மீது வழக்குத் தொடர நான் மறுத்ததும், மிகச் சிறந்த வகையில் என் பேரில் நல்லெண்ணத்தை உண்டாக்கி விட்டன. தங்கள் நடத்தைக்காக டர்பன் ஐரோப்பியர்கள் வெட்கப்பட்டனர். நான் ஒரு பாவமும் அறியாதவன் என்று பத்திரிகைகள் கூறின;

ஜனக்கூட்டத்தின் செயலைக் கண்டித்தன. இவ்விதம் என்னை ஆத்திரத்துடன் கொல்ல முயன்றது, எனக்கு அதாவது என் லட்சியத்திற்கு பெரும் நன்மையாகவே முடிந்தது. தென்னாப்பிரிக்காவில் இந்திய சமூகத்தின் கௌரவம் இதனால் உயர்ந்தது; என் வேலையையும் இது எளிதாக்கியது.

மூன்று, நான்கு நாட்களில் நான் என் வீட்டிற்குத் திரும்பினேன். சீக்கிரத்திலேயே வழக்கம்போல் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்து விட்டேன். மேற்கண்ட சம்பவம் என் வக்கீல் தொழிலிலும் வருமானம் அதிகமாகும்படி செய்தது. சமூகத்தின் கௌரவத்தை அது அதிகமாக்கிய துடன் சமூகத்தின்மீது இருந்த துவேஷத்தையும் அது வளர்த்துவிட்டது. இந்தியன், ஆண்மையுடன் எதிர்த்தும் போராடுவான் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்ட உடனே அவன், தங்கள் நலத்துக்கு ஓர் ஆபத்து என்றும் வெள்ளைக் காரர்கள் கருதலானார்கள். நேட்டால் சட்டசபையில் இரு மசோதாக்களைக் கொண்டு வந்தார்கள். அதில் ஒன்று, இந்திய வர்த்தகர்களுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடியது;

மற்றொன்று, இந்தியர் வந்து குடியேறுவதற்கு கடுமையான தடையை விதிப்பது. வாக்குரிமைக்காக நடத்திய போராட்டத்தினால் அதிர்ஷ்டவசமாக ஒரு பலன் ஏற்பட்டிருந்தது. அதாவது, நிறம் அல்லது

இனத்தைக் குறித்துச் சட்டம் பேதம் காட்டக் கூடாதாகையால், இந்தியர் என்ற வகையில் அவர்களுக்கு விரோதமாக எந்தச் சட்டமும் செய்யக்கூடாது என்று முடிவாகி இருந்தது. ஆகையால், மேற்கண்ட மசோதாக்களின் வாசகம், எல்லோருக்கும் அச்சட்டம் அமுலாகும் என்ற முறையில் இருந்தது. ஆனால், அவர்களுடைய உண்மையான நோக்கம், நேட்டாலில் இருக்கும் இந்தியருக்கு மேற் கொண்டும் நிர்பந்தங்களை உண்டாக்குவ தேயாகும்.

இம் மசோதாக்கள், எனக்கு இருந்த பொது



வேலையை அதிக அளவுக்கு அதிகமாக்கிவிட்டன. சமூகம், எப்பொழுதையும்விட நன்றாகத் தன் கடமையை உணர்ந்திருக்கும்படியும் இவை செய்தன. அம் மசோதாக்களில் மறைந்திருந்த விஷம நோக்கத்தைச் சமூகத்தினர் அறியும்படி செய்வதற்காக, அவைகளை இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, முற்றும் விளக்கியும் வைத்தோம். குடியேற்ற நாட்டு மந்திரிக்கு விண்ணப்பித்துக் கொண்டோம். இதில் தலையிட அவர் மறுத்துவிட்டதால், மசோதாக்கள் சட்டம் ஆகிவிட்டன.

நேரம் முழுவதையும் அநேகமாக நான் பொது வேலைக்கே செலவிட வேண்டியதாயிற்று. நான் முன்பு கூறியது போல், ஸ்ரீ மன்சுக்லால் நாஸர், டர்பனுக்கு முன்பே வந்து விட்டதால், அவர் என்னுடன் தங்கலானார். தம் நேரத்தை அவர் பொது வேலைகளில் செலவிட்டதால் ஓரளவுக்கு எனக்கு இருந்த வேலை குறைந்தது.

நான் இல்லாதிருந்த சமயத்தில் எனக்குப் பதிலாக காங்கிரஸ் காரியதரிசியாக இருந்த சேத் ஆதம்ஜி மியாகான், போற்றத்தக்க வகையில் தமது கடமையை நிறைவேற்றியிருந்தார். அங்கத்தினர்கள் தொகையை அதிகமாக்கியிருந்தார். அதோடு, நேட்டால் இந்தியக் காங்கிரஸின் நிதியிலும் சுமார் ஆயிரம் பவுன் அதிகமாக்கியிருந்தார். இம் மசோதாக்களினாலும், நாங்கள் கப்பலி லிருந்து இறங்கியபோது நடந்த ஆர்ப்பாட்டங் களினாலும் இந்தியரிடையே ஏற்பட்டிருந்த விழிப்பை நான் நல்ல வழியில் பயன்படுத்திக் கொண்டேன். அங்கத்தினர்கள் அதிகமாகச் சேருவதுடன் பணமும் வேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன். இப்பொழுது நிதி 5,000 பவுன் ஆயிற்று. காங்கிரஸுக்கு நிரந்தரமான நிதியைத் திரட்டி, அந்த நிதியைக்கொண்டு சொத்துக்களை வாங்கி, அச் சொத்துக்களிலிருந்து

கிடைக்கும் வாடகையைக் கொண்டு ஸ்தாபனம் நடந்துவருமாறு செய்ய வேண்டும் என்று விரும்பினேன். ஒரு பொது ஸ்தாபனத்தை நிர்வகிப்பதில் எனக்கு இது முதல் அனுபவம். என் யோசனையை என் சக ஊழியர்களிடம் அறிவித்தேன். அவர்களும், இதை ஆதரித்தனர்.

வாங்கிய சொத்து, வாடகைக்கு விடப்பட்டது. கிடைத்த வட்டி, காங்கிரஸின் நடைமுறைச் செலவுக்குப் போதுமானதாக இருந்தது.

சொத்தை நிர்வகிப்பதற்குச் செல்வாக்குள்ள வர்களைக் கொண்ட தர்மகர்த்தா சபையையும் அமைத்தோம். இன்றும்கூட அது இருந்து வருகிறது. ஆனால், அது இடைவிடாத சச்சரவுக்கு இடமாகி விட்டது.

இதன் காரணமாக இப்பொழுது அச் சொத்தின் வாடகைப் பணமெல்லாம் கோர்ட்டில் சேர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தத் துக்ககரமான நிலைமை நான் தென்னாப்பிரிக்காவில் இருந்து வந்த பிறகு உண்டாயிற்று. ஆனால், இந்தத் தகராறு ஏற்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே, பொது ஸ்தாபனங்களுக்கு நிரந்தரமான நிதி இருக்க வேண்டும் என்று எனக்கு இருந்த கருத்து மாறிவிட்டது. இப்பொழுதோ, பல பொது ஸ்தாபனங்களை நான் நிர்வகித்திருப்பதால் எனக்கு அதிக அனுபவம் ஏற்பட்டிருக்கிறது நிரந்தரமான நிதியின் மூலம் பொது

ஸ்தாபனங்களை நடத்துவது நல்லது அல்ல' என்பதே இப்பொழுது என்னுடைய திடமான கருத்தாகி விட்டது. நிரந்தரமான நிதி ஒரு ஸ்தாபனத்திற்கு இருக்குமாயின் அந்த ஸ்தாபனத் தின் ஒழுக்கச் சிதைவுக்கான வித்தும் அந்நிதியு டன் ஊன்றப்பட்டு விடுகிறது. பொதுமக்களுடைய அங்கீகாரத்தின் பேரில், அவர்கள் அளிக்கும் நிதியைக் கொண்டு நடப்பதே பொது ஸ்தாபனம்.


அத்தகைய ஸ்தாபனத்திற்குப் பொதுஜன ஆதரவு இல்லையென்றால், பின்னும் நீடிப்பதற்கு அதற்கு எந்த உரிமையும் இல்லை. நிரந்தரமான

நிதியைக் கொண்டு நடத்தப்படும் பொது ஸ்தாபனங்கள், பொதுஜன அபிப்பிராயத்திற்கு மாறுபட்ட காரியங்களையும் அடிக்கடி செய்கின் றன. நம் நாட்டில் இதை நாம் ஒவ்வொரு கட்டத்திலும் அனுபவித்துக் கொண்டு வருகி றோம். மத சம்பந்தமான தரும ஸ்தாபனங்கள் என்று கூறப்படும் சில ஸ்தாபனங்கள், கணக்குக் காட்டுவது என்பதையே விட்டு விட்டன. தருமகர்த்தாக்களே,

அச் சொத்துக்களுக்குச் சொந்தக்காரர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள், யாருக்கும் பொறுப்பாளிகள் அல்ல. 'இயற்கையைப் போல, அன்றைக்குத் தேவையானதைப் பெற்று வாழ்வதே பொது ஸ்தாபனங்களுக்கு உகந்தது' என்பதில், எனக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை. பொதுஜன ஆதரவைப் பெற முடியாத ஸ்தாபனத்திற்கு பொதுஜன ஸ்தாபனமாக இருந்து வரும் உரிமையே இல்லை. வருடந்தோறும் ஒரு ஸ்தாபனத்திற்குக் கிடைக்கும் சந்தாத்தொகை, அதன் செல்வாக்குக்கும், அதன் நிர்வாகம் எவ்வளவு யோக்கியமாக நடந்து வருகிறது என்பதற்கும் சரியான அளவுகோல் ஆகும். ஒவ்வொரு பொது ஸ்தாபனமும் இந்த அளவுகோலுக்கு உட்பட வேண்டும் என்பது என் கருத்து. ஆனால், யாரும் என்னைத் தவறாக எண்ணிக் கொண்டுவிட வேண்டாம். சில ஸ்தாபனங்களை, அவைகளின் தன்மையை அனுசரித்து, நிரந்தரமான கட்டடம் இல்லாமல் நடத்த முடியாது. நான் கூறியவை, அத்தகைய ஸ்தாபனங்களுக்கு பொருந்தாது. பொது ஸ்தாபனங்களின் நடைமுறைச் செலவுகளை ஒவ்வொரு வருடமும் தானாகக் கிடைக்கும் சந்தாப் பணத்தைக் கொண்டு நிர்வகித்து வரவேண்டும் என்று சொல்லவே நான் விரும்புகிறேன்.

தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரக நாட்களில் இக் கருத்து ஊர்ஜிதமாயிற்று. அந்த மகத்தான போராட்டம், ஆறு ஆண்டுகள் வரை நடந்தது. அதற்கு லட்சக்கணக்கான ரூபாய் தேவைப்படும். நிரந்தரமான நிதி எதுவும் இல்லாமலேயே அதை நடத்தினோம். சந்தா கிடைக்காவிட்டால் அடுத்த நாளைக்கு என்ன செய்வதென்று எனக்குத் தெரியாமல் இருந்த சமயங்களும் எனக்கு நினைவில் இருக்கின்றன. ஆனால், வருங்காலத்தில் என்ன நேரும் என்பதை நான் இப்பொழுது சொல்லுவதற்கில்லை. இனிக் கூறப்போகும் வரலாற்றில், மேலே சொன்ன கருத்துக்கள் சரியானபடி நிரூபிக்கப்பட்டிருப்பதை வாசகர்கள் காணலாம்.





# வாழ்க்கையும்....

# வள்ளலாரும்....

*19–ம்* நூற்றாண்டில் மாபெரும் புரட்சியாளர், மகான், ஞானிசித்தர், ஆராய்ச்சியாளர் என்று நீண்டு கொண்டே போகும் பட்டியலுக்கு சொந்தமானவர் நமது இராமலிங்க அடிகளார் என்னும் வள்ளல் பெருமானார்.

இவர் செய்யாத செயல் இல்லை என்று கூட சொல்லலாம். அப்படியாக பெயர் பெற்ற தத்துவ ஞானி.

வள்ளலாரின் வாழ்க்கை என்பது ஒரு மனித குலத்திற்காக இறைவனே அவதாரமாக எடுத்தது தான் மனித குலத்திற்கு மாமனிதனாக திகழ்ந்தவர்.

வள்ளலாரின் வாழ்க்கை ஒரு தவ வாழ்க்கை என்று செல்வதே உண்மையாக இருக்கும்.

வள்ளலாராக எடுத்த இறைவனின் அவதார நோக்கம் மனித பிறவிகள் அனைவரும் பயன் அடைவதே. மானிட பிறவி மட்டுமா பயன் அடைந்தது அனைத்து ஜீவராசிகள் மீதுமே அளபரிய அன்பு வைத்தவர் வள்ளலார். உலகில் உள்ள வாய் இல்லா ஜீவன்களும் இறை நிலையைஅடைய வேண்டு என்பதே வள்ளல் பெருமானாரின் கொள்கையாக இருந்தது அனைத்து உயிர்கள் மீது அன்பு, கருணை, இரக்கம் என்ற ஜீவகாருண்யம் என்ற ஒரு சொல்லால் உலகை கட்டி ஆண்டவர் நமது பெருமானார். ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல் என்ற வள்ளலார். அதாவது எல்லா உயிர்களிடத்திலும் உயிர்இரக்கத்தோடு இருந்தாலே போதும் என்று கூறுகிறார். அதுவே நமக்கு தேவையான அனைத்தையும் தரும் என்று அரிதியிட்டு கூறுகிறார்.

வாழ்க்கையில் மனித இனம் எவ்வாறு இருக்க வேண்டும் மற்றும் இருக்க கூடாது போன்றவைகளையும் விவரமாக நமக்கு வள்ளலார் விளக்குகின்றார். அத்துடன் உண்ணும் உணவு உயிர்களை கொல்லாது சைவ உணவாக இருக்க வேண்டும் என்பதே இதுவே ஞானத்திற்கு வழிவகுக்கும் என்றும் சொல்லுகிறார்.

பிற உயிர்களை கொன்று புசிப்பதன் மூலம் பாவம் ஒன்றே சேரும். அதனால் இறைவனை எக்காலமும் அடைய முடியாது என்று புலால் தவிர்த்தலையும் மது தவிர்த்தலையும் பெருமானார் கட்டாயமாகக்கூறுகிறார்.

அத்துடன் அவர் எப்போதும் கூறும் ஒரே ஒரு தராக மந்திரமாக இருப்பது எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க என்பதே அதாவது

இந்த மாபெரும் மந்திரத்திலே அனைத்தும் அடங்கி உள்ளது. இதனை அறிந்ததாலே வள்ளல் பெருமானார், அருட்பெரும்ஜோதி ஆண்டவரிடம் விண்ணப்பமாக அனைத்து உயிர்களும் இன்புற்று வாழவேண்டும் என்று கூறுகிறார்.



வள்ளலாரின் இந்த மந்திரம் ஆய்வுக்குரியது. சற்று சிந்தித்து பார்த்தால் புரியும். ஒரு மனிதன் உயிர்வாழ விவசாயி நன்றாக இருந்தால் மட்டுமே அவனால் உணவு உற்பத்தி செய்ய முடியும். இதன்மூலம் மற்றவர்கள் உணவு உண்டு உயிர்வாழ முடியும். அவ்வாறாக உணவு பயிர்கள் வளர தேவையானது நீர் அவை நமக்கு மழையின் மூலம் கிடைக்கிறது. மழை வானத்தில் இருந்து வருகிறது. சொல்லபோனால் வானம் ஆண் என்றால் மண் (பூமி) பெண். இந்த மழை வருவதற்கு முக்கியமானவை மரங்கள். இதை அறிந்தாலே நமது அரசாங்கம் மரம் வளர்க்க சொல்கிறது. ஆனால் நாம் இருக்கும் மரங்களை வெட்டி நிலத்தை பாலைவனமாக மாற்றுகிறோம்.

இதனை அறிந்த நம் முன்னோர்கள் மரங்களை இறைவனாக வணங்கினார்கள். அத்துடன் மரங்களின் பெயராலே ஊர்களும், உருவாகின (உதாரணமாக, சென்னை புரசைவாக்கத்தில் உள்ள சிவன் கோயிலின் தல விருட்சமாக இருப்பது புரசை என்னும் மரம். அதனாலே அந்த ஊருக்கு புரசைவாக்கம் என்று பெயர் ஏற்பட்டது)



மரங்கள் உருவாக மிக முக்கியமான காரணிகளாக பறவைகள் உள்ளன. மனிதர்கள் நட்டு வளர்க்கும் மரங்களை காட்டிலும் பறவைகளே அதிக அளவில் விதை பரவல் மூலம் மரங்களை உருவாக்குகிறது. ஆகவே தான் பறவைகளையும் நமது இந்து மத புராணங்களில் கடவுளின் தூதுவனாகவும் வாகனமாக கட்டப்படுகிறது. அத்துடன் பறவைக்கு உணவு வைக்க வேண்டும் என்று சொல்லப் படுகிறது. உண்மையாக இறைவனின் தூதுவன் பறவைகளே.

இதனை அறிந்த வள்ளலார் இந்த மாபெரும் மந்திரமான எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க என்று கூறுகிறார், பிறருடைய பசியைப் போக்குவதோடு மட்டும் ஒருவனுடைய ஒழுக் கமும், கடமையும் முடிந்துவிடாது. பிறரின் துன்பங்களை களையவும் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும் என்பதே வள்ளலாரின் பொன்மொழியாகும்.

**செ.மதன்.**

# மறையின் துணையுடன்...



உலகத்தில் பல போகப்பொருட்கள் இருக்கின்றன. அவைகளை அடைவதற்காக மட்டுமே நம் முயற்சியையும் உழைப்பையும் நேரத்தையும் செலவிடுகின்றோம். ஆனால் இங்கு எல்லாவற்றிற்கும் மேலான ஒன்றை அடைந்தால் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம் என்று ஞானியர்கள் அருளியுள்ளனர். அதுதான் பரம்பொருள். அந்த பரம்பொருள் இயற்கை உண்மை வடிவாகவும், இயற்கை இன்ப வடிவாகவும் விளங்குகிறது. அதனை அனைவரும் அறியும்பொருட்டு, பெருமானார் அருளிய திருவருட்பா என்னும் மாமறை மிக எளிமையாக வழிகாட்டுகிறது. அப்பரம் பொருளை அடைவதற்கு, மறையின் துணைக் கொண்டு, ஏற்றுவது அவசியம். அவை அல்லாமல் அற்ப அறிவிற்கு எட்டிய யுக்திகளை மட்டும் உபயோகம் செய்தால் பெறற்கு அரிது. ஏனெனில், ஒவ்வொருவரும் தம் யுக்திகளை உபயோகப்படுத்தி, பல உலக விஷயங்களை சாதிக்கலாம். ஆனால், பரம்பொருளானது மனித அறிவிற்கும் யுக்திக்கும் அப்பார்ப்பட்டது. நம் சிந்தனைக்கு உட்படாத விஷயங்களை யுக்தியால் தீர்மானம் செய்ய முடியாது.

சில பொருட்கள், புலன்களுக்கும் சிந்தனைகளுக்கும் அப்பாற்பட்டவையாக இருக்கின்றன. அதனால்தான் இங்கு யுக்தியால் தீர்மானம் செய்ய முடியாதென்று கூறப்படுகிறது. இதற்கு உதாரணமாக, காற்றை சொல்லலாம். அதை கண்ணால் காண இயலாது. ஆனால், ஸ்பரிசத்தினால் உணர முடியும். தானாகவே அசையும் பொருட்களின் மூலம் காற்றை அறிகிறோம். அன்றாடம் உட்கொண்டு வெளிவிடும் சுவாசத்திலும் காற்று கலந்துள்ளது. தேகத்தினுள் சென்று வரும் காற்றின் பிரயாணம் நின்றுவிட்டால் உயிரும் நின்றுவிடுமாதலால் காற்றுக்கும் தேகத்திற்குமே சம்பந்தம் உண்டு. காற்றில்லாமல் உயிர் வாழ முடியாது. சத்விசாரத்தாலும் ஜீவகாருண்யத் தாலும் தவத்தாலும் பெற்ற இறையருளால், காற்றின் பிரயாணத்தை (சுவாசத்தை) உள்நிறுத்தி, சாகாநிலையை அடையலாம் என்பது வள்ளலார் வாக்கு.

நெருப்பு, மலை போன்றவற்றை கண்ணால் பார்க்கலாம். சிட்டிகை. கரகோஷம், சங்கீதம், கடலலை சப்தம் போன்ற சில ஓசைகளை, காதுகளைக் கொண்டு கேட்பதால் மட்டுமே கிரகிக்க முடியும். பார்வையற்ற குருடனுக்கு பொருட்களை அறியவும், காது கேட்காத செவிடனுக்கு ஓசையை உணரவும் முடியாது. அதேபோல், புலன்களால் பரம்பொருளை அறியவோ அடையவோ இயலாது. அவ்வாறு, புலன்களுக்கு அப்பாற்பட்டதாக விளங்கும் பரம்பொருளை அடைவதற்கான எளிய மார்க்கமே சன்மார்க்கம். அதற்கு ஒரு சற்குருவையும், அவர் அருளிய மறையையும் (மற்றும் அந்த சன்மார்க்கத்தையும்) இறுகிப் பற்றிக்கொள்ள வேண்டும். சூரியனைப் பற்றி தெரிந்து கொள்ள, வானவியல் சாஸ்திரத்தைப் பற்றி அறிந்து கொள்வது அவசியமாகிறது. அதற்கு முதலில், அந்த சாஸ்திரத்தில் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டு தக்க ஆசான் மூலம் அறியமுடியும். அதேபோல், பரம்பொருளைப் பற்றி தெரிந்துகொள்ள, ஞானியர்களையும், அவர்கள் இயற்றிய மறைகளையும் துணைக்கொள்ள வேண்டியுள்ளது. திருவருட்பா என்னும் தெய்வதீந்தமிழ் அருட்பாசுரங்களின் துணை மிக முக்கியமானதாகும். திருவருட்பா என்னும் மறையைப் பற்றிக்கொண்டு பிறவிப் பெருங்கடலைக் கடந்து உய்வதே பிறவியின் லட்சியமாகும்.

**என்னே அதிசயம்ஈ திவ்வுலகீர் என்னுரையைப் பொன்னே**
**எனமேற் புனைந்து கொண்டான் – தன்னேரில்**
**நல்ஆர ணங்கள்ளலாம் நாணியவே எல்லாஞ்செய்**
**வல்லான் திருக்கருணை வாய்ப்பு – திருஅருட்பா.**

# அரிசித்தொண்டு அருளாளர்களுக்கு தயவான வேண்டுகோள்

ஆலய சேவாதாரிகள், அரிசித்தொண்டு அருளாளர்களைக் குறித்த நேரத்தில் சந்திக்க காலதாமதம் ஏற்படுவதினாலும், தங்களின் தயவான தொண்டு, குறித்த நேரத்திற்கு ஆலயத்திற்குக் கிடைக்க வேண்டிய காரணத்தினாலும், அருள்ஜோதி அன்ன ஆலயம் புதியதொரு வழிமுறையை வகுத்துள்ளது. அருளாளர்கள் தாங்கள் தயவுடன் அளிக்கும் அரிசித்தொண்டு மற்றும் கல்வித்தொண்டு காணிக்கையினைத் தங்களது வங்கியிலேயே (தற்போது இந்தியன் வங்கி அருளாளர்கள் மட்டும்) அருள்ஜோதி அன்ன ஆலயம் மற்றும் அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை கணக்கிலேயே செலுத்திடலாம். அருளாளர்கள் தற்போது வழங்கி வரும் ரூ.100/– காணிக்கையினை ரூ.150/–ஆக (நூற்றிஐம்பதாக) உயர்த்தி வழங்கிடுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். **பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.**

From

To

**தொடர்புக்கு:**
**9003034056 / 25589575**

The Manager
Indian Bank
……………………………… Branch
Chennai

Sir,

I am having Saving /Current Account with your Bank and the Account No. is ……………………………… I request you kindly to transfer a sum of Rs……………… (Rupees………………………………………………………only) to the following Account Holder on 5th of every month from May 2014 onwards.

| **Details** | | **Aruljothi Anna Alayam** | **Aruljothi Educational Trust** |
|---|---|---|---|
| **Account No.:** | | **403721163** | **403723477** |
| **Bank:** | | **Indian Bank** | **Indian Bank** |
| **Branch:** | | **Jawahar Nagar** | **Jawahar Nagar** |
| **IFSC No.:** | | **IDIB 000P132** | **IDIB 000P132** |

தங்கள் இல்லத்திற்கு வரும் சேவாதாரியிடம் இப்படிவத்தினைப் பெற்றுக் கொண்டு, அதனைப் பூர்த்தி செய்து, தங்களது வங்கியின் மேலாளரிடம் சேர்ப்பித்து விட்டால் தங்களது காணிக்கை பிரதி மாதம் 5ஆம் தேதி அருள்ஜோதி அன்ன ஆலயம் / கல்வி அறக்கட்டளை வங்கி கணக்கில் சேர்ந்து விடும். பின்னர் இத்தகவலை அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாகத் தெரிவித்து விடவேண்டும். இத்திட்டத்தில் அனைத்து அருளாளர்களும் பங்கு கொள்ள தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

***Email: annaalayam@gmail.com***

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

சென்ற மாத தொடர்ச்சி...

**சத்தியம் சத்தியம் சத்தியம் எனவே**
**இத்தகை வழுத்தும் என்தனிச் சத்தே 1210**

வேத ஆகம புராண இதிகாசங்களால் புகழ்ந்து உரைக்கப்படும் பிரமம்; இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலத்திற்கும் பொருந்தும் உண்மைப் பொருளாக விளங்கும் ஒப்பற்ற சிவமே ஆகும். சொல், செயல், சிந்தனை மூன்றிலும் சத்தியம் விளங்க சிவம் விளங்கும்). உண்மை , வாய்மை , மெய்மை என்னும் முப்பொருள் விளக்கமாக பரம்பொருள் விளங்குகின்றது.

**துரியமும் கடந்து ஓர் பெரியவான் பொருள் என**
**உரைசெய் வேதங்கள் உன்னும்மெய்ச் சத்தே 1212**

தன்மயமாய் (சிவமும் தாமும்) நிற்கும் நிலையையும் தாண்டி, தூய்மையாய் நிற்கும் (உயிர்ப்படங்கல்) நிலையில், யோகியர் இருந்து கண்டு அனுபவிக்கும் பெரியதாகிய மேலான பரம்பொருள், என ஞானியரால் கருதப்படுவது மெய்மை உருவான சத்தாகிய சிவம்.

**அன்று அதன் அப்பால் அதன்பரத்து அதுதான்**
**என்றிட நிறைந்த என்தனிச் சத்தே 1214**

பேருறக்க நிலையையும் தாண்டி, உயிர்ப்படங்கல் நிலையில் நின்று காணும் அருள் காட்சிக்கும் மேலானதாகும் பரம்பொருள், என ஞானிகள் எடுத்தோதும் எங்கும் நிறைந்திருப்பது யான் உரைக்கும் ஒப்பற்ற சிவம்.

## 38. இயற்கை விளக்கம்

**என்றும் உள்ளதுவாய் எங்கும் ஓர் நிறைவாய்**
**என்றும் விளங்கிடும் என்தனிச் சித்தே 1216**

எக்காலத்தும் உள்ளதாகிய பொருளாய், எவ்விடத்தும் ஒரு தன்மையாய் நிறைந்ததுவாய், எந்நாளும் விளக்கமுறும் பொருளாய் இருப்பது என்னுடைய ஒப்பற்ற சித்தாகிய சிவம்.

**சத்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்**
**இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே 1218**

அணு முதல் அண்ட கோடிகள் வரை உள்ள எல்லாப் பொருள்களையும் இயக்கும் பலவாகிய சத்திகளும், மிகப்பலவாகிய அவற்றை இயக்கும் ஆற்றல்களாகிய சத்திமான்களும், (காரணர்கள்) இவ்வாறு எண்ணற்றனவாய் விளங்குவன பலவும் ஞான உருவாகிய சிவமே.

**தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்**
**இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே 1220**

தத்துவங்கள் (தத்துவம் 36; புறநிலைக் கருவிகள்60 ஆக தொண்ணூற்றாறு பலவாகவும், அவற்றை உடைய உருவும் அருவுமாகிய உயிர்கள் பலவாகவும், இவ்வாறு விரிந்து விளங்குவன யாவும் யான் கூறும் ஒப்பற்ற சித்தாகிய சிவம்.

**படிநிலை பலவாய்ப் பதநிலை பலவாய்**
**இடிவற விளங்கிடும் என்தனிச் சித்தே 1222**

உலகங்கள் பலவாகவும், அவற்றில் வாழும் உயிரினங்கள் பெறும் இந்திர பதம் முதலான பதங்கள் பலவாகவும், குறைவின்றி ஆன்ம வளர்ச்சியால் ஏற்படும் படி நிலைகள் யாவுமாய் நிறைந்து விளங்குவது, யான் உரைக்கும் ஒப்பற்ற சித்தாகிய சிவம்.

**மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்**
**ஏற்பட விளக்கிடும் என்தனிச் சித்தே 1224**

உருத்திரர், சித்தர் முதலான சிவ உருவுடைய தேவர்களும், பிரமன், திருமால் முதலிய தேவாதி தேவர்களும் எனப்பலராய் உரைக்க, அவர்களுக்கும் மேம்பட்டு விளங்கி அவர்களைச் செயலாற்றுவிப்பது சித்தாகிய சிவம்.

**உயிர்வகை பலவாய் உடல்வகை பலவாய்**
**இயலுற விளக்கிடும் என்தனிச் சித்தே 1226**

ஓரறிவுடைய உயிர்முதல் உயிர்கள் பலவாகவும், ஊர்வன பறப்பன முதல் அவற்றின் உடல்வகைகள் பலவாகவும் நின்று இயங்குமாறு விளங்கச் செய்வது, ஒப்பற்ற சித்துப் பொருளாகிய சிவம்.

**அறிவவை பலவாய் அறிவன பலவாய்**
**எறிவற விளக்கிடும் என்தனிச் சித்தே** **1228**

அறிவுடைய உயிர்கள் பலவாகவும், அவற்றால் அறியப்படும் பொருள்கள் பலவாகவும், உயிர் வாழ்க்கைக்குத் தேவைப்படுவதால் அவற்றுள் வேண்டாதன (தள்ளப்படுவன) எதுவுமின்றிப், பயன்பட விளங்கச் செய்வது ஒப்பற்ற சித்தாகிய சிவம்.



# வள்ளலார் பொன்மொழிகள்

* சினம், சோம்பல், பொய், பொறாமை, கடுஞ்சொல் முதலியவைகளை அறவே நீக்க வேண்டும்.

* அன்பும் இரக்கமுமே வாழ்க்கையின் அடிப்படை. உண்மையைச் சொல், அது உனது வார்த்தைகளைப் பாதுகாக்கும்.

* யாரிடத்தில் தயவு அதிகம் இருக்கிறதோ அவரிடத்தில் கடவுள் இருக்கிறார்.

* எனக்குச் சித்திகள் எல்லாம் தருகின்ற தெய்வமாக விளங்குவது சத்தியமே.

* எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் பாவித்து சம உரிமை வழங்குவோரின் மனதில்தான் இறைவன் வாழ்கிறான்.

* ஏதும் இல்லாத ஏழைகளுக்கு இரக்கப்பட்டு மனது உவந்து ஈவதே ஜீவகாருண்யம்.

* வாக்கு வேறு, மனம் வேறு, செய்கை வேறு என்கிற நிலையில் இறைவனை வழிபடாதீர்கள். மூன்றும் ஒன்றிய நிலையில் வழிபடுங்கள்.

## 3. குரு

ஆன்மீகம் என்பது தொடர்ந்த போராட்டம். வெற்றி கிடைக்கும்வரை, நமது சொந்த இயல்பை நாம் பற்றும் வரை தொடர்ந்து போராடுவது. அது ஒரு நாள், இரண்டு நாள் போராட்டமோ, பல வருடம் அல்லது பல பிறவிப் போராட் டமோ அல்ல. அது நூற்றுக்கணக்கான பிறவிகள்கூட நீடிக்க லாம். அதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். அது உடனேயும் கிடைக்கலாம்; நூற்றுக்கணக்கான பிறவிகளுக்குப் பிறகு கிடைக்காமலும் இருக்கலாம். இதற்கெல்லாம் தயாராக இருக்க வேண்டும். இத்தகைய மன உறுதியுடன் தொடங்கும் சீடன் வெற்றி காண்கிறான்.

குரு விஷயத்தில், அவர் சாஸ்திரங்களின் உட்கருத்தை அறிந்திருக்கிறாரா என்பதை முதலில் பார்க்க வேண்டும். பைபிள், வேதம், குரான் என்று உலகம் முழுவதும் எல் லோரும் படிக்கின்றனர். ஆனால் இவை வெறும் வார்த்தைகள் மட்டுமே; இலக்கணத் தொடர்கள், சொற்றொடர் இலக் கணங்கள், சொல் இலக்கணங்கள், தத்துவங்கள் மட்டுமே. அதாவது, மதத்தின் உலர்ந்த எலும்புகள் மட்டுமே. ஒரு நூல் எவ்வளவு காலத்திற்கு முன் எழுதப்பட்டது என்பதை ஒரு குரு கண்டுபிடிக்கலாம். ஆனால் வார்த்தைகள் என்பவை கருத்துக்களின் வெளித்தோற்றங்கள் மட்டுமே. வார்த்தை களில் அதிகம் ஈடுபட்டு வார்த்தைகளின் வேகத்தில் மனத்தை ஓடவிடுபவர்கள், அவற்றின் பொருளை, உட்கருத்தை இழந்துவிடுகிறார்கள். ஆகவே குரு, சாஸ்திரங்களின் உட்கருத்தை அறிந்திருக்க வேண்டும்.

எனது குருதேவர் ஒரு கதை சொல்வார்: சிலர் ஒரு மாந் தோப்பிற்குச் சென்றனர். அவர்களுள் பெரும்பாலோர் இலை களை எண்ணுவதிலும், அவற்றின் நிறத்தைக் கவனிப் பதிலும், கிளைகளின் அளவைக் கண்டுபிடிப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டனர், குறிப்புகளும் எழுதிக் கொண்டனர். பிறகு அற்புதமானதொரு கலந்துரையாடலிலும் ஆழ்ந்தனர். ஆனால் புத்தியுள்ள ஒருவர் மட்டும் தனியே அமர்ந்து, மாம்பழத்தைத் தின்றுகொண்டிருந்தார். இவர்களுள் யார் கெட்டிக்காரர்?

இலைகளையும் கிளைகளையும் எண்ணுவது, குறிப்புகள் எழுதுவது ஆகியவற்றை மற்றவர்களுக்கு விட்டுவிடுங்கள். இத்தகைய காரியங்களுக்கு மதிப்பு இருக்கவே செய்கிறது, ஆனால் ஆன்மீகத் துறையில் அதற்கு இடம் இல்லை . இத்தகைய காரியங்களால் மனிதன் ஆன்மீகத்தில் ஈடுபட முடியாது. இலை எண்ணுகின்ற இவர்களின் மத்தியில் ஓர் உறுதியான ஆன்மீகவாதியை நீங்கள் காணவே முடியாது.

ஆன்மீகம்தான் மனிதனின் மிக உயர்ந்த லட்சியம்; மிக உயர்ந்த பெருமை. மிக எளிதானதும் அதுவே.



# அருள்ஜோதி குருகுல பாடசாலையின் சார்பாக பொங்கல் விழா

*8.01.2020* புதன்கிழமை அன்று பொங்கல் விழாவை முன்னிட்டு அருள்ஜோதி குருகுல பாடசாலையின் சார்பாக திரு.நல்லோர் வட்டம் தயவு திருமதி.தனலட்சுமி அம்மா அவர்களும், தலைமை ஆசிரியை திரு.மீனா அவர்களும் மற்றும் 5ம் வகுப்பு பயிலும் மாணவ–மாணவிகளும், விவசாயிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் விவசாய கிராமமான செஞ்சியம்மன் நகர் என்ற கிராமத்திற்கு சென்று கிராம மக்களை ஒன்று திரட்டி உழவுத் தொழிலின் முக்கியத்து வத்தையும், தேவையையும் பற்றி திரு.பாலு ஐயா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இதனைத் தொடர்ந்து பள்ளி, மாணவர்களும் பேசி அவ்வூர் மக்களை மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்.


அக்கிராம மக்களிடையே குழந்தைகள் விவசாயத்தின் சிறப்பைப் பற்றி அழகாக பேசுவதைக் கண்டு வியந்தார்கள். மேலும் அக்குழந்தைகளுக்கு பாராட்டுகளை தெரிவித்தார்கள். பின்னர் அவ்விசாய மக்களிடம் மாணவர்கள் விவசாயம் தொடர் பான கேள்விகளும், சந்தேகங்களையும் கேட்டுத் தெரிந்துகொண்டனர். பிறகு அவ்விசாயிகளின் காலின் விழுந்து அனைத்து மாணவர்களும் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்கள். விவசாயிகளும், மாணவர் களை மனதார வாழ்த்தினார்கள். இதனை தொடர்ந்து மாணவர்களின் கைகளால் அவர்களுக்கு உணவு அளித்து நன்றி செலுத்தினர்.

இதேபோல *9.01.2020* வியாழன் அன்று அருள்ஜோதி குருகுல பாடசாலையின் சார்பாக ஓயன்பாக்கம் என்ற கிராமத்திற்கு சென்று அங்குள்ள மக்களை ஒன்று திரட்டி விவசாய தொழிலின் முக்கியத்துவத்தையும் அவற்றின் சிறப்பையும் மாணவர்கள் ஊர்மக்களிடம் எடுத்து கூறினர். பின்னர் அவர்கள் காலில் விழுந்து மாணவர்கள் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டனர். பின்னர் பள்ளியின் சார்பாக அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

இதேபோல் *10.01.2020* வெள்ளி அன்று அருள்ஜோதி பாடசாலையின் சார்பாக 4ம் வகுப்பு மாணவ–மாணவிகளும் இணைந்து இயைன்குளம் கிராமமக்களை சந்தித்து விவசாயம் தொடர்பாக சந்தேகங்களை கேட்டறிந்தனர். பின்னர் பள்ளியின் தாளாளர் விவசாயத்தை பற்றி பேசும் போது நமது நாட்டில் விவசாயம் தான் நாட்டின் தூண்கள் என்று பேசினார். திரு. சந்திரகுமாரி விவசாயிகளிடம் நன்மை, தீமைகளை கேட்டறிந்தார். பின்னர் அவர்கள் எல்லோருக்கும் உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சி இனிதேமுடிவுற்றது.







**பொங்கலை முன்னிட்டு அருள்ஜோதி குருகுல பாடசாலையில் உள்ள மாணவர்கள் விவசாயிகளுக்கு நன்றி செலுத்தும் நிகழ்ச்சியின் புகைப்படம்**














# தைபூசத்தின் சிறப்பு யாது?

-தயவு.குமரேசன்ஐயா



மனிதனின் உண்மை வடிவம் ஆன்மா இதனைச் சூழப் புற உயிருடம்பு விளைவுற்று விளங்கச் செய்து கொண்டுள்ளதாம்


நமது பிண்ட ஆகாச ஆன்ம உண்மை நம் தலைநடுநின்று ஒளிர்கின்றது. அண்ட ஆகாசத்துப் பூசநட்சத்திரம் கடக நடுப் பூத்து ஒளிர்கின்றது. அந்த அண்டக் கடக நடுப்பூசம் மனிதனின் கட மாகிய உடலின் கம் ஆகிய தலையில் நடு திகழ்கின்றது.

இவ் ஆன்ம நட்சத்திரத்தில் தான் கடவுள் பரமான்மாவாக பூரணமாய் இருந்து நிறை பக்குவ ஞானத்தால் காட்சி அருளி ஆட்கொண்டு மனிதனைத் திரிதேக சித்தியோடு தூல, சூக்கும, காரண உடலை பக்குவத்தில் சுத்த தேகம் பிரணவதேகம் ஞானதேகம் எனும் முத்தேக சித்திவடிவோடு மரணமில்லாப் பெருவாழ்வில் விளங்கஞ் செய்கின்றார். இது தைப்பூச சுத்த சன்மார்க்க அனுபவநிலை ஆகும்.

பக்குவ ஞானமாகிய நிறைமதி நாள் தான் தை மாதப்பூச நாளாக வருகின்றது அதிலே கடவுள் திருவடிக்காட்சி தோன்றி இலங்கலின் அந்த நட்சத்திரமே காற்குளமனப்படுகின்றது. திருவருளாலே அத்திருவடியைப் பற்றி அந்நிழலில் சுகங்கண்டு கலந்து மறைந்து போகிறான் அன்றைய மனிதன் அருள் தந்த பேறு அதுவாகும். இது சமய, மத சன்மார்கங்களின் ஏக-தேச அருளானுபவம் ஆகும்

## வள்ளலார் பொன் மொழிகள்

**சமரச சன்மார்க்க கொள்கை உடையவர் இறைவனை இந்த வழியில் காணத்தான் விரும்புவார். தான், தன் குடும்பம், தன் இனம், தன் நாடு என்னும் குறுகிய மனத்தைப் போக்கி இப்பெருஉலகமே நல்வாழ்வு பொருட்டு கடவுளை வணங்க வேண்டும்.**



படம்–4

# திருக்காப்பீட்டுக் கொள்ளுதல்

வள்ளற்பெருமானார், ஸ்ரீமுக ஆண்டு தைத்திங்கள் 19ஆம் நாள் (30–01–1874) நான் உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப்போகின்றேன். பார்த்து அவநம்பிக்கை அடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது வெறும் வீடாகத்தான் இருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார்; என்னைக் காட்டிக்கொடார் என்று கூறிவிட்டு அறைக்குள் சென்று அமர்ந்துகொண்டு கதவைத் திருக்காப்பிடும்படிக் கட்டளையிட்டார்

என்சாமி எனதுதுரை என்உயிர்நாயகனார்
இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்றார்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது
பேருடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெருந் தவத்தாலே நான்தான்
சாற்றுகின்றேன் அறிந்திதுதான் சத்தியம்சத் தியமே
மின்சாரும் இடைமடவாய் என்மொழிநின் தனக்கே
வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே

–திருவருட்பா ஆறாம் திருமுறை



## தொண்டு செய்பவர்களின் அனுபவங்கள்

திருமதி கலாவதி 81/110 பெருமாள் கோயில் தெரு, பெரியதோப்பு, சென்னை மணலியில் வசித்து வரும் இவர்கள் குடும்பம் பல வருடமாக அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு தொண்டுகள் சிறப்பாக செய்துவருகின்றனர். மேலும் பலரையும் தொண்டு செய்வதற்கு ஈடுபடுத்தியுள்ளனர். இவர்கள் தொண்டு செய்வதினால் ஆரோக்கியமாக இருப்பதாக நிறைவடைகின்றனர். மேலும் இவர்களின் தொண்டு சிறக்க எல்லாம் வல்ல அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் ஆசீர்வதிப்பார் இவர்களும் இவர்களின் தொண்டும்

வாழ்க! வாழ்க!! வளர்க!!!

வாழ்க வளமுடன்! மகிழ்ந்து அருள் துணையால் வாழ்க!

---

## ஓவியங்கள்:

5 முதல் 15 வயது வரை உள்ள மாணவ-மாணவிகளிடமிருந்து எனக்கு பிடித்த சைவ பிராணிகள் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்கப்படுகின்றன.

## இளைஞர் கட்டுரைகள்

சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்க கட்டுரைகள், மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைப் படத்துடன் பிரசுரிக்கப்படும்.

## சன்மார்க்க திருமண மாலை

உலகின் மாபெரும் கடவுள் கொள்கையான வள்ளலார் பெருமானாரின் சுத்த சன்மார்க்கத்தை கடைப்பிடிப்பவர்களின் இல்ல திருமண வரன்கள் வரவேற்கப்படுகிறது. அவர்களின் முழு விவரம் அருள்ஜோதி மாத இதழில் பிரசுரிக்கப்படும்.

(குறிப்பு: புலால் மறுத்தசன்மார்க்க அன்பர்களுக்கு மட்டுமே)




# வடலூர் அருட்பயணம்

அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி! ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்று, அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம்

4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6.சித்திவளாகம்.

இந்த புனித பயணத்தில் கலந்துகொள்ளபவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டணம் ரூ.800 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி ஆலயத்தில் இருந்து காலை 9.00 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு: 9003034056

குறிப்பு: அடுத்த பயணம்: 06.03.2020

திரு.கணேசன் அவர்கள் வடலூர் அருட்பயணத்தில் மாதம் மாதம் தவறாமல் வருவது வழக்கம். இவர் வடலூர் அருட்பயணத்தால் உடல்நலம் ஆரோக்கியமாக இருப்பதாகவும் அவர்களது குடும்பம் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாக இருப்பதாகவும் கூறினார்கள். அவர்களின் இந்த மகிழ்ச்சிக்கு காரணம் வடலூர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்று கூறுகிறார். மேலும் இவர்களின் குடும்பமும், மகிழ்ந்து அருள்துணையால் வாழ்க வாழ்க வாழ்க...

# தென்னாற்காடு மாவட்ட ஆட்சியாளராக இருந்த J.H.கார்ஸ்டின் mcs, வள்ளலார் உடம்போடே மறைந்தார் என்பதை உறுதி செய்த தகவல்

பார்வதிபுரம் கடலூரின் தென்மேற்கில் 23 மைல் தொலைவில், விருத்தாசலம் சாலையில் அமைந்த பார்வதிபுரம் என்னும் ஊர் 1189 மக்களைக்கொண்டது. இந்த ஊர் இராமலிங்க அடிகளாருடன் தொடர்பு கொண்டது. பிற்காலத்தில் தோன்றிய அருளாளராக இருந்த இவரை மக்கள் தெய்வமாகப் போற்றினர்.


1823ல் சிதம்பரம் தாலுக்காவில் வேளாள மரபினில், எளிமையான பெற்றோர்கட்குப் பிறந்த இவர் பின்னாளில் தன்னை உயர்த்திக் கொண்டதுடன் சிறுவனாயிருந்த போதே இறைவனைப் போற்றிப்பாடும் அருட் கவியாய் இவர் பேசப்பட்டார். அப்பாடல்களில் சில சைவம் சார்ந்தும், திருவெற்றியூர், திருத்தணி கோயிலில் அமர்ந்த இறைவன் பெயர் அமைந்த பாடல்களாகும். பின்னாளில் ஆன்மிகத்தில் தம்மை உயர்த்திக்கொள்ள எண்ணம் கொண்டோர் இப்பாடல்களைப் போற்றி அதன் வழியாகவே இறைவனை வழிபட்டனர். எனவே படிப்படியாக இவரை அருகிலிருந்தவர்கள் குருவாகவும் தொலைவில் இருந்தவர்கள் வழிகாட்டியாகவும் ஏற்றனர். பின்னாளில் பார்வதிபுரம் அடுத்த கருங்குழியில் தங்கினார். அப்போது அவரின் ஆன்மிகப்பாதை மிக உயர்ந்திருப்பதை அறிந்ததால் பல சான்றோர்கள், உயர்ந்த அந்தஸ்த்தில் இருந்தவர்கள், அரசு அதிகாரிகள் போன்றோர் கருங்குழியருகில் குடியேறினர்.


1872ல் எண்கோணவடிவில் ஞானசபையை பார்பவதிபுரத்தின் எல்லைக்குட்பட்ட வடலூரில் பொது மக்கள் கொடுத்த நிதியுதவியால் கட்டினார். அந்த இடத்திலிருந்து பார்த்தால் சிதம்பரத்தின் நான்கு கோபுரங்களையும் காணலாம் என்பதும் ஒரு காரணம் என்போரும் உண்டு. அந்த ஞானசபை சாதாரணக் கோயில் அல்ல. அது முற்றிலும் வித்தியாசமான வழிபாட்டு விதிகளுடன் தோற்றுவிக்கப்பட்டது. இறந்தவரை எழுப்புதல் கூடும் என்றதாலும், இறந்தவரை எரிக்காமல் புதைக்க அறிவுறுத்தியதாலும் ஏராளமான மக்கள், அந்தணர்கள் உட்பட்ட, பிணங்களை அவ்வூரின் எல்லையில் உள்ள பிற ஊர்களிலிருந்தும் கூட கொண்டு வந்து புதைத்தனர். 1872ம் ஆண்டு மேட்டுக்குப்பத்தில் இப்போதும் நாம் காணக் கூடிய ஒரு அறையின் முன்பாக நின்று நாம் உட்சென்று சமாதி கூடாப் போகிறோம் எனவே சிலநாட்கட்கு கதவைத்திறக்க வேண்டாம் என அங்கிருந்தவர்களிடம் சொல்லி, உட்சென்று தாழிட்டுக்கொண்டனார். அதன் பிறகு அவரைக் காணவில்லை. இப்போதும் அந்த அறை பூட்டப்பட்டிருக்கிறது. அதன் சாவியை வைத்திருப்போரின் கூற்றுப்படி அவர் இறைவனுடன் கலந்து விட்டார். அவரை முழுமையாக நம்புபவர்கட்கு அவர் காட்சியளிப்பார். என்கின்றனர். எது எப்படி இருப்பினும் அவரது பாடல்கள், கொள்கைகள் மேன்மையானவை என்பதை அனைத்து தரப்பினரும் ஏற்பதுடன் அவ்வழி நடப்பதே உத்தமம் என்பது பொதுக் கருத்தாகும்.






அரசிதழ்





தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியாளராக இருந்த J.H. கார்ஸ்டின் M.C.S., (J.H. GARSTIN M.C.S) Collector of South Arcot என்பவர் 1878 மே மாதம் மேட்டுக்குப்பம் சென்று சித்திவளாகத் திருமாளிகையில் ஆய்வு செய்தார். வள்ளலார் உடம்போடே மறைந்தார் என்பதை உறுதி செய்தார். இதனை 1878ஆம் ஆண்டு வெளிவந்த அரசிதழில் வெளியிட்டார்.







இதன் மறுபதிப்பினை W. பிரான்சிஸ் I.C.S., (W. FRANCIS I.C.S.,) என்பவர் 1906ஆம் ஆண்டு மறுபதிப்பாக அரசிதழில் வெளியிட்டுள்ளார். (பக்கம் 316, 317) இவ்விரு அரசிதழ்களையும் சென்னை கன்னிமாரா நூலகத்தில் காணலாம். Thanks ( Connimara Library, Chennai )



# இராமலிங்க அடிகளார் சித்தி அடைந்த காட்சியை சித்தி வளாகத்தில் அன்னைக்கு கிடைத்த அனுபவம்

திருவருட்பிரகாச வள்ளலாரின் மரணமில்லாப் பெருவாழ்வு பற்றி திருஅருட்பிரகாச வள்ளலார் நம் கண்களுக்குத் தோன்றாமல் மறைந்த மர்மத்தைப் பற்றி அரவிந்தர் ஆசிரமத்தின் குறிப்பு இது.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி இரவில் எனது வழக்கமான தியானத்தில் ஒரு தொடர்ச்சியான காட்சி தோன்றியது. தொடக்கத்தில் வர்ணிக்க இயலாத ஒரு அமைதி மற்றும் சாந்தம் எல்லா இடங்களிலும் சாந்தம் எல்லா இடங்களிலும் நிலவுவதாக உணர்ந்தேன். பிறகு நான் ஒரு ஆச்சரியமான தெய்வீக ஒலியைத் தொடர்ந்து கேட்டேன். பின்னரே அந்தக் காட்சித் தோன்றியது. எளிமையும் அழகான சூழலும் நிறைந்த ஒரு சிறிய கிராமம் தெரிந்தது. அங்கே நிலையான எங்கும் நிறைந்த மிக உயர்ந்த தெய்வீக பேரொளியானது. அருள் ஆற்றலையும் தெய்வீக நறுமணத்தையும் அவ்விடத்தில் நிரப்பியது. அது என் இதயத்திலும் ஆனந்த குதூகலத்தை உருவாக்கி அருள் நாட்டத்தை மென்மேலும் அதிகரித்தது. கிராமத்தின் மையத்தில் ஒரு சிறிய வீடு காணப்பட்டது.

அருளின் தெய்வீக நறுமணம் அவ்வீட்டிலிருந்து எங்கும் பரவியது. வள்ளலார் (சுவாமி இராமலிங்கம்) வீட்டிற்குள் (சித்திவளாகத் திருமாளிகை) நுழையும் காட்சி தோன்றிற்று. அவரது முகம் அமைதியாகவும் சாந்தமாகவும் இருந்தது. அவருடைய உடலில் அருள்ஒளி பிரகாசித்தது. மேலும் அவரது உடல் தங்க ஒளி மேலும் அவரது உடல் தங்க ஒளி வண்ணமாக பிரகாசித்தது. அவர் தனது அறைக்குள் நுழைந்து கதவுகளை மூடி தாளிட்டார். அந்த நேரத்தில் அறையில் நிலையான எங்கும் நிறைந்த மிக உயர்ந்த தெய்வீக அருட்பேரொளி நிரம்பியிருந்தது. அங்கே நிலவிய இப்பேராற்றலை பார்வையுடையவரும் பிறவியிலேயே பார்வையற்றவரும் கூட உணரக்கூடியதாய் இருந்தது. அவ்வருட்பேரொளியால் அங்கே அமைதியும், சாந்தமும், தெய்வீக நறுமணமும் நிலவியிருந்தது. வள்ளலார் ஒரு வெள்ளை துணி பரப்பிய தாழ்வான பலகையின் மீது அமர்ந்து ஒருமையுடன் இருக்க ஆரம்பித்தார். அத்தருணத்தில் அவர் தவநெருப்பாகவும், சாந்த உணர்வுடையவராகவும் மெய்யருட் ஜோதியின் மெய்யருட்சிகரமாக காணப்பட்டார். அவர் மிகச் சிறந்த தெய்வீக வடிவமாகத் திகழ்ந்தார். ஒளி வெள்ளம் அவரது தூய ஒளிரும் உடலிருந்து அனைத்து திசைகளிலும் பரவியிருந்தது. ஸ்தூல உடலை என்றும் இளமையோடு இருக்கும் மரணமில்லாத அருள்உடலாக மாற்றி அமைக்கும் உண்மை இரகசியத்தின் திறவுகோலாக பேரருட் பெருங்கருணை அருள்ஒளி திகழ்கின்றது. தெய்வீக இயல்பாகவும் தெய்வீக உடலாகவும் மாற்றுவதற்கு ஒருவர் அருளொளிப் பேரானந்தக் கடலின் ஆழத்தில் வாழ வேண்டும். அவரது (வள்ளலார்) உடல் முழுவதிலும் இருந்து வெளிப்படும் ஒளி

வெள்ளத்தின்தீவிரம் மிகவும் சக்தி வாய்ந்தது. போதிய வலிமையும் திறனும் இருந்தால் மட்டுமே அதை பெறவும் தக்க வைக்கவும் இயலும், அவர் உடலின் ஒளி வெள்ளத்தை கண்ட காரணத்தினால் என் உடல் முழுவதும் மகிழ்ச்சியினாலும் மிகுந்த உற்சாகத்தினாலும் அதிர்வடைந்தது. சிறிது நேரம் ஒருமையுடன் இருந்த பிறகு அவர் எழுந்து வானத்தைப் பார்த்தார். முழு நிலவு பூமியில் அதன் ஆனந்தமயமான குளிர்கதிர்களை வீசியது. நிலவிலிருந்து சிறிது தொலைவில் திகைப்பூட்டும் ஒரு பிரகாசமான நட்சத்திர ஒளிக் காணப்பட்டது. இராமலிங்கர் சிறிது நேரம் தன்கவனத்தை அதில் வைத்தார் அவர் அகத்தில் தோன்றிய ஆனந்தகளிப்பு அவர் முகத்தில் பிரதிபலித்தது. சிறிது நேரம் கழித்து அவர் மீண்டும் வெள்ளைத் துணி விரித்த இருக்கையின் மீது அமர்ந்து ஆழமான ஒருமைக்குச் சென்றார்.

இராமலிங்கர் மூடிய மற்றும் தாளிடப்பட்ட அறையின் உள்ளே இருந்த போதிலும் அவரால் பிரபஞ்சம் முழுவது முள்ள உடல், உயிர்கள், அதன் மன உலகங்கள், இயற்கையான பூமி அதை உள்ளடக்கிய வானம், சந்திரன், நட்சத்திரம் மற்றும் மேகங்கள் ஆகிய அனைத்ததையும் தெளிவாகக் காணமுடிந்தது. இவ்வாறு அவர் ஆழ்ந்த ஒருமையுடன் இருந்தபோது அவருடைய அகத்திலிருந்து வெளிப்பட்ட மெய் அருட்ஜோதியின் கதிரொளி

பிரகாசமாக ஒளிரும் அவரது முழு வெண்மை வடிவத்தையும் முழுமையாக வேதித்தபோது மிக நுண்மையான சிற்றணு உணர்வுத் துகள்களாக ஆனது.

அது பிரபஞ்சம் முழுவதும் மற்றும் தூய மெய்யுணர்வு உலகங்களையும் தாண்டி ஊடுறுவி பரவியது. ஒளியுடன் கூடிய நுண்மையான வெள்ளை மெய்யுணர்வு துகள்களின்கதிர்விச்சு பூமியின் எல்லா இடங்களிலும் எல்லா பொருட்களிலும் மற்றும் எல்லாவற்றிலும் ஊடுறுவி பரவியது.

ஊலகம் முழுவதும் துகள்கள் பரவிய பிறகு அதைப் பார்க்க முடியாமல்போனது அது என் பார்வையிலிருந்து மறைந்தது ஆனால் இப்பொழுது எல்லா இடங்களிலும் கற்பூர மணமானது. இனிய மென்மையான வாசனையை பரப்பியது.



ஆனந்த உணர்வை தந்து என் இதயத்தையும் கவர்ந்தது பின்னர் நான் இராமலிங்கருடைய உலகளாவிய ஒளிரும் பொன் மயமான வடிவத்தின் அறிய காட்சியைக் கண்டேன்.

உண்மையில் அவரது பொன்னான வடிவத்தின் அடத்தி முழு பிரபஞ்சத்தையும் அடக்கியது.

இந்த வடிவமும் என் பார்வையிலிருந்து மறைந்து போனது அதற்கு மாறாக இன்னொரு காட்சி என்னிடம் தோன்றியது. அது பொன்மயமான மெய்யறிவு அருட்ஜோதியாக மின்னலை விட வேகமாக அனைத்து மெய்யறிவு அருட்ஜோதியாக அனைத்து திசைகளிலும் பரவியதைக் கண்டேன். அது முழு பிரபஞ்சத்தையும் ஊடுறுவியது. மேலும் தூய மெய்ணர்வு உலகங்களிலும் பரவியது.

அது நம் பூமியிலும் அதன் அனைத்து வகையான உயிர்களிலும் பொருட்களிலும், வெளிப்படையாக உணரப்படாத விஷயத்திலும் மற்றும் மனசாட்சியின் பரந்து இருண்ட சாம்ராஜ்யத்திலும் கூட நுழைந்தது. எங்கும் ஊடுறுவியதன் மூலம் பொன்மயமான சத்திய சுடர் அனைத்து உலக வடிவங்களையும் காட்சிகள் மற்றும் அனுபவங்களின் காரணமாக பேரானந்தத்தால் ஈர்க்கப்பட்டேன்.

அருட்ஜோதியே அனைத்து ஒளிகளுக்கும் மூலமாகும். நாம் காணக்கூடிய ஒளியின் ஒரு திடவடிவம் அல்லது அடையாளமே கற்பூரம். எல்லா இடங்களிலும் பரவலாக பரவியிருந்த உணர்வுள்ள வெள்ளைத் துகல்களாலான பொருட்களிலிருந்து பிரிக்கமுடியாத அளவிற்கு இராமலிங்கரின் ஆன்மா அதுவாகவே மாறியிருந்தது வெளிப்படும் போது அது அருட்பேரொளியாக விளங்கும்.

பொன் மயமான அருளொளி மனிதனை தூய்மைபடுத்தி மாற்றி அமைக்கும். மேலும் ஸ்துல உடலையும் அழியாத நித்தியதேகமாக்கும். சன்மார்க்கத்தின் உண்மை தூய்மை மற்றும் நன்மை பூமியில் முழுவதுமாக நிலவும்.

ஆன்மா தூயஆவியை உணரும், உடலும் தன்னுடைய நித்திய தன்மையை உணர்ந்து ஆன்மாவின் மெய்யுடலாக விளங்கும்.

## SAINT RAMALIGAM DISAPPERARED FROM THIS SMALL HUT OF METTUKUPPAM

# AS DECLARED BY J.H.GARSTIN., I.C.S., THE THEN COLLECTOR OF SOUTH ARCOT

The increase in this last decade was at the rate of nearly 70 per cent. The figures are perhaps, however, affected by changes in the area which was included within the town at the different enumerations. Of these there is no record. Any serious falling off in the ground-out crop through disease or otherwise would doubtless again reduce the population of the place.

Parvatipuram: A village of 1,189 inhabitants lying 23 miles south-west of Cuddalore on the Viruddhachalam road. The place is connected with one Ramalinga Paradesi, a somewhat curious example of a later-day saint who has been almost deified by his followers.



Born in 1823 in the Chidambaram taluk of Vellala parents in humble circumstances, he developed, while still little more than a boy, an undeniable talent for versification, and his poems brought him into notice. They dealt with religious matters; some of them, like those of the famous Saivite saints of old, were composed in eulogy of the merits of the deities at certain shrines, such as the temples at Tiruttani in North Arcot and Tiruvottiyur near Madras; others took for their subject the beauties of the higher life. It was these that led to his becoming gradually regarded as a spiritual guide and teacher. After visiting many of the well-known sacred places of the South, he finally settled at karunguli, the next village to Parvatipuram. At its height his influence must have been very real, as his admirers and diciples, who included even level-headed Government officials, are said to have changed their residences and gone to live where they could be constantly near him.

About 1872 the curious octagon-shaped sabha with the domed roof which is to be seen at Vadalur, a hamlet of Parvatipuram, was erected by him from subscriptions. It is said that the spot was chosen because from

it are visible the four great towers of Nataraja's shrine at Chidambaram. It is not an ordinary temple, the details of the worship in it being unusual.

Ramalinga Paradisi seems to have persuaded his disciples that they would rise again from the dead, and he consequently urged that burial was preferable to cremation. Even Brahmns are said to have been buried in this belief, and people who died in other villages were in several cases brought to Vadalur and interred there. In 1874 he locked himself in a room (still in existence) in Mettukuppam ( hamlet of Karunguli), which he used for sumadhi or mystic meditation, and instructed his disciples not to open it for some time. He has never been seen since, and the room is still locked. It is held by those who still Believe in him that he was miniraculously made one with his god and that in the fulness of time he will reappear to the faithful. Whatever may be thought of his claims to be a religious leader, it is generally admitted by those who are judges of such matters that his poems. many of which have been published, stand on a high plane, and his story is worth noting as an indication of the directions which religious feruour may still take.

Tirthanagari: About twelve miles south-west of Cuddalore, near the middle of the embankment of the great Porumal tank. Population 1,484. It is not on any main road and is best reached from Alapakkam railway-station, a journey of about five miles through very dismal country.

The chief interest of the place lies in its temple. This is not architecturally wonderful, but it contains a great number of in scriptions ( one set of them, in a mantapam, occupies a space some 24 feet in lengh by four feet deep) and, on the southern wall of the shrine, an unusual and curious series of sculptures. The inscriptions are noted in the Government Epgraphist's report for 1903-04; they include records of the Pallavas, Cholas and Pandyas and an interesting grant by the great Krishna Deva of Vijayanagar, dated 1517 A.D. and recounting his victories in the south.

The sculptures depict the story of the visit of Siva, in one of those playful moods in which he is so often represented, to a ryot who is said to have owned the land on which the shrine now stands. The ryot, runs the tale and the successive episodes in it are carved on the shrine with considerable spirit was ploughing his field when Siva appeared to him in the guise of a sanyasi and asked for food. The ryot replied that he had just finished his meal and had nothing to give, and went on ploughing. The sanyasi however implored him to take pity, as he was dying of hunder, and even seized the bullock to stop the plough. The peasant then went to his house to get food and, finding that there was nothing left but the seed-grain, told his wife to cook that for the holy man. The repast ready, the couple returned with it to the field. There, to their surprise, they found a splendid crop of waving corn where but a few minutes before had been nothing but bare earth, and heard the voice of the sanydsi scaring away the crows which were attacking the heavily-laden ears. They searched for him and were just in time to see him disappear down a well which is still shown near the temple, is called the tirtha-kulam, or sacred well, and gives its name to the village.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை



எஸ்.எஸ்.தணிகை அடுக்ககம், எண்:2,
மதுரைசாமிமடம் தெரு, திரு.வி.க.நகர்,
பெரம்பூர், சென்னை – 600011
தொலைபேசி: 64588584, 9600024878

அருள்ஜோதி

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com

## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மென்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5–ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கிகாரம் பெற்ற (பதிவெண் 24/239-2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மீக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு | ரூ.2000/– |
| உணவு | ரூ.5000/– |
| சிறப்பு உணவு | |
| (வடை, பாயாசம் உட்பட) | ரூ.8000/– |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்

பெயர்:

பதிவெண்: ________

முகவரி:

# உங்கள் கவனத்திற்கு...

மாதப்பூசத் திருநாள் : 8.02.2020

பூஜை நேரம் : மாலை 6.45 மணி

**அனைவரும் வருகை தந்து வள்ளல் பெருமானாரின் அருள்பெற வேண்டுகின்றோம்.**

அன்புடையீர் வணக்கம்! நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில், சன்மார்க்க அறக்கட்டளையின் சார்பாக உலக சமாதானம் மற்றும் மக்கள் உடல் ஆரோக்கியம் பெற ஒவ்வொரு வியாழக்கிழமையும் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறுகின்றது. இந்தப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதன் மூலம், உங்களுடைய எல்லா விதமான பிரச்சனைகளும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருளினால் தீர்க்கப்படுகின்றன. அதனால், தாங்களும், பிரார்த்தனையில் கலந்துக்கொண்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளோடு வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்று குறையின்றி வாழ வேண்டுமென்பதே இதன் முக்கிய நோக்கமாகும். அனைவரும் வருகை தந்து வள்ளல் பெருமானாரின் அருளைப் பெற வேண்டுகின்றோம்.

நேரம்: மாலை 3.30 மணி அருள்ஜோதி அன்ன ஆலயம், எண்:33, முதன்மை சாலை, கென்னடி சதுக்கம், திரு.வி.க.நகர், பெரம்பூர், சென்னை – 600011 தொடர்புக்கு: 9003034056, 044-25589575

சன்மார்க்கம் வேதாத்திரியம் மருத்துவம் சொற்பொழிவுகள் டி.வி.டி. க்களில் வேண்டுமா...




**அனுகவும்:**
**திரு.கண்ணன்,**
**9840489703**

# அருள்ஜோதி அன்ன ஆலயத்தின் வேண்டுகோள்

## பசி தீர்ப்பது பரம புண்ணியம்

அருள்ஜோதி

அன்புடையீர் வணக்கம்!!!

தினசரி 5000 அன்பர்களுக்கு பசியாற்றுவித்தல் பணியினை தொடர்ந்து 20 வருடங்களாக அருள்ஜோதி அன்ன ஆலயம் செய்து வருகின்றது. ஆலயத்தின் உறுப்பினர்களாக இருக்கும் 10000 அரிசி தொண்டு அன்பர்கள் அளிக்கும் அரிசி, பருப்பு மூலமாக இப்புண்ணியத் தொண்டு, தொய்வில்லாமல் நடைபெற்று வருகின்றது. தற்போது, நாளுக்கு நாள் பசியாறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், ஆலயத்திற்கு கூடுதலாக அரிசி தேவைப்படுகின்றது. அரிசித் தொண்டு அன்பர்கள், புழுங்கலரிசி மற்றும் பச்சரிசி அதிகளவில் வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அரிசி அதிகம் அளிப்பவர்கள், ஆலயத்திற்கு தகவல் தெரிவிக்கும் பட்சத்தில், தங்கள் இல்லத்திற்கே ஆலய சேவாதாரிகள், நேரில் வந்து பெற்றுக் கொள்வர் எனத் தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி!!!

**தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 044-25570770, 25589575**



# புண்ணியத்தைத் தேடி...



## அருள்ஜோதி வாசகர்களுக்கு வணக்கம்!

மக்களின் பசியினை அகற்ற நாள்தோறும் அன்ன தர்மம் செய்து வரும் அருள்ஜோதி அன்ன ஆலயம் மற்றுமொரு அங்கமாக கோயம்பேடு மார்க்கெட்டில் பணி செய்யும் மக்களின் பசியைப் போக்குவதற்கு நாள்தோறும் கஞ்சிவார்த்தல் பணியை செய்து வருகின்றது. இந்தப் புண்ணியத் தொண்டில் பங்கு பெறுவதற்கும், கோயம்பேடு மார்க்கெட்டில் கஞ்சி ஊற்றுவதற்கும் தொண்டுள்ளம் கொண்ட நபர்கள் தேவைப் படுகிறார்கள்.

**தொடர்புக்கு: 044–25570770**





அருள் ஜோதி
ஆன்-லைன் டியூப் டி.வி.
நிகழ்ச்சி
சன் மார்க்கர்களின்
கருத்துக்கள் ...



#vallalar #Aruljothi
இது எதனால் ஆனது?/ Which substance is it made up of?/Thiru.Alagar Ramanujam Ayya
1,375 views • Dec 3, 2019



#vallalar #Aruljothi
என் வாழ்வில் சன்மார்க்கம்/திரு. சுப்பிரமணிய பாரதி ஐயா
773 views • Dec 16, 2019



#vallalar #Aruljothi
கிருபானந்த சுவாமிகள் ஏன் ஞானசபையை விட்டு சென்றார்? Thiru.Umapathi Ayya
7,120 views • Aug 31, 2019



#vallalar #Aruljothi
வள்ளலார் பெற்ற தீட்சைகள்/Dayavu.SMT.Siva Rajeswari Amma/Part-1
1,135 views • Dec 6, 2019




#vallalar #Aruljothi
வள்ளலார் வழி நடந்தால் வருகின்ற வளங்கள்/Thiru.Saravanan ayya/Part-1
10,889 views • Oct 8, 2019

**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை Internet UTube மூலம் காணலாம்.**

## ARULJOTHI TELEVISION FOUNDATION

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT:9003034056, 044-25582243**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com

## BANK DETAILS

**ARULJOTHI TELEVISION FOUNDATION**
**A/C.No.:35562632395**
**STATE BANK OF INDIA**
**THIRU.VI.KA.NAGAR BRANCH**
**IFSC CODE: SBIN0016283**

**Published by: S. Dhanalakshmi ,**
**Published from No.:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thavathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012**

# நீங்களும் அன்னதர்மம் செய்யலாம்

ஒவ்வொரு இல்லறத்தாரும் மாதம் மூன்று கிலோ அரிசியும், அரை கிலோ பருப்பும் கொடுப்பதன் மூலம், மாதம் முப்பது நாளும் தினமும் ஒருவருக்கு அன்னதர்மம் செய்ததன் பலனைப் பெறமுடியும். தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் இத்திட்டத்தில் சேர்வதன் மூலம் சென்னையிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் நாள்தோறும் அன்னதர்மம் நடைபெறச் செய்யலாம். இந்தப் புண்ணிய தொண்டில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் முகவரியை ஆலயத்துக்கு தெரிவித்தவுடன் ஆலயத்தைச் சேர்ந்த சேவாதாரிகள் தாங்கள் செலுத்தும் தருமத்தை நேரில் வந்து பெற்று கொள்வார்கள். மேலும், தங்கள் திருமண நாள், பிறந்த நாள் மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் போன்ற சிறப்பு நாட்களில் அன்ன ஆலயத்தின் மூலம் தாங்கள் விரும்பும் ஆலயத்தில் அன்னதர்மம் செய்யலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

## அன்ன தர்மத்தின் சிறப்புகள்

1.அன்னதருமம் செய்வதன் மூலம் இறைவன் அருளைப் பெறலாம்.

2.நம் சந்ததியினருக்குச் சேர்த்து வைக்கும் அழியாப் புண்ணியச் சொத்து அன்னம் கொடுத்தலே.

3.அனைத்து நோய்களும் நீங்க அருமருந்து அன்னம் கொடுப்பதே ஆகும்.

4.மனக்குறைகள் நீங்கி மகிழ்வுடன் வாழவைப்பது அன்ன தருமமே

5.தொழில் சிறந்து விளங்க அன்னதருமம் செய்வோம்.

6.கடன்கள் நீங்கி மன அமைதி பெற அன்னதர்மம் செய்வோம்.

7.போதும் என்ற மனநிறைவுடன் ஓர் ஆன்மா கூறுமளவுக்கு ஒரு தருமம் உண்டென்றால் அது அன்னதருமமே. அன்னதருமம் என்ற திறவுகோலைக் கொண்டுதான் எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவிக்க முடியும். நம் சந்ததியினருக்கு நாம் சேர்த்து வைக்கும் அழியாப் புண்ணியச் சொத்து அன்னம் கொடுப்பதே.



**இந்தப் புண்ணியத் தொண்டில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**

**பசி தீர்ப்பது** — **பரம புண்ணியம்**


தயவுத்திருமதி. **தனலட்சுமி அம்மையார்,**
எண்:2, அருட்பெருஞ்ஜோதி நகர், மதுரைசாமிமடம் தெரு,
பெரம்பூர், சென்னை - 11.
**தொலைபேசி:9003034056, 044-25589575**



Owned, Published: Thavathirumathi. Dhanalakshmi Ammaiyaar, Published from No.:33, Main Road, Kennady Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 and Printed by Bharani-press Editor: Thavathirumati. Dhanalakshmi Ammaiyaar

THIRUVARUTPRAKASA VALLALAR Tamil Monthly
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA
TNTAM / 2014 / 60370

Date of Publication: 2nd of Every month
அஞ்சல் நாள் : 09-02-2020
Posted at Egmore RMS
Postal Registration No.TN /CCN / 637/ 2018-20

# அன்பார்ந்த அரிசித் தொண்டு அருளாளர்கள் கவனத்திற்கு!

தாங்கள் இதுகாறும் மாதாமாதம் அளித்துவரும் காணிக்கையின் மூலம், பல்வேறு மக்களின் பசிப்பிணியினைப் போக்குவதற்கு பல்வேறு பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.

பிரதி மாதம் குறிப்பிட்ட தினங்களில் ஆலய சேவாதாரிகள் தங்களது இல்லத்திற்கு நேரிடையாக வந்து, தாங்கள் அளிக்கும் காணிக்கையினை பெற்று செல்கின்றனர். இருந்த போதிலும் சிற்சில சமயங்களில், சில அருளாளர்களின் இல்லத்திற்கு இயலவில்லை.

இதனால், அருளாளர்கள் தங்களது வங்கி கணக்கில் NACH திட்டத்தின் மூலம் தங்களது காணிக்கையினை செலுத்தி விடலாம். இத்திட்டம் குறித்து, விரிவாக, ஆலய சேவாதாரிகள் தங்களிடம் தெரிவிப்பார்கள்.

மேலும், இதுவரை ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று (1253) அரிசித் தொண்டு அருளாளர்கள் இத்திட்டத்தின் மூலம் தங்களது காணிக்கையினை செலுத்தி வருகின்றனர்.

தாங்களும் தங்களது காணிக்கையினை வங்கிமூலம் செலுத்தும் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுமாறு, தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.









## சாகாதவனே சன்மார்க்கி என்ற சத்தியத்தை உணர வேண்டும்

**அனுப்புநர்:**
திருஅருட்பிரகாச வள்ளலார்
எண்:17, கென்னடி சதுக்கம்,
பிரதான சாலை, பெரம்பூர்.
திரு.வி.க.நகர், சென்னை–11
தொடர்புக்கு: 90030 34056, 044–2558 9575

**பெறுநர்:**
..............................................................
..............................................................
..............................................................
..............................................................